# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜீ | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | பெரியசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 28.10.2024.

A1 & A2 present.

<u>முதல் விசாரணை;</u>

நான் சந்தியூர் ஆட்டையாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சந்தியூர் ஆலமரம் பஸ்ஸ்டாப் பின்புறம் ஆர்.எஸ் என்ற காபி பார் நடத்தி வருகிறேன். 22.12.2014 அன்று 9.50 மணி முதல் 10.00 மணிக்குள் நான் என் கடையில் டீ போட்டுக்கொண்டிருந்தேன். என்னுடய கடை திறந்த கடை ஆகும். அப்போது நாமக்கல்லிருந்து சேலம் நோக்கி ஒரு லாரி மணல் ஏற்றிக்கொண்டு வந்தது. அதேநேரம்

சேலத்திலிருந்து நாமக்கல் நோக்கி தனியார் பேருந்தான ஜோதி பஸ் வந்து கொண்டிருந்தது. அதன் மீது லாரி மோதி விபத்து ஏற்பட்டது. அதன்பின்னர் பஸ்சுக்கு பின்புறம் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி லாரி பள்ளத்தில் விழுந்து விட்டது. பஸ்சில் வந்த ஒரு பெண் இறந்துவிட்டார். பஸ்சில் இருந்த பலபேருக்கு காயம் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் வந்த கணவன் , மனைவி, குழந்தை வந்தார்கள். அதில் கணவன் மனைவி இறந்துவிட்டார்கள். குழந்தை லாரியிலிருந்து கொட்டிய மண்ணுக்குள் புதைந்திருந்தது. இருசக்கர வாகனத்தில் குழநதையும் வந்தது என்று சொன்னபிறகு மண்ணுக்குள் குழந்தையை தேடினார்கள். குழந்தை உயிருடன் இருந்தது. குழந்தையை நான் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்தேன். காயம்பட்ட நபர்களையும் இறந்த நபர்களையும் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்தோம். ஆம்புலன்சிற்கும் ஹய்வேசிற்கும் நான்தான் தகவல் சொன்னேன்.

இரவு 9.30 மணி முதல் 10.00 மணி அளவில் காவல் உயர் அதிகாரி வந்து சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு லாரியிலிருந்த மணலையும் லாரியிலிருந்து கீழே கொட்டிய மணலையும் கைப்பற்றினார்கள். அதன்பின்னர் லாரியையும் TN29 AK 6428 என்ற டிப்பர் லாரியையும் கைப்பற்றினார்கள். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னுடன் சலூன் கடைக்காரர் ராஜாவும் கையெழுத்து செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். போலிசார் கைப்பற்றிய மண்ணையும் லாரியையும் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். மேற்படி மண் மற்றும் லாரி ஏற்கனவே சா.பொ.1 முதல் 3 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. என்னை போலிசார் விசாரித்தார்கள்.

2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது ஆம்புலன்சிற்கு நான்தான் தகவல் சொன்னேன் என்று கூறி இருக்கிறேனா என்றால் ஆம். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு அருகில் டீ கடை வைத்துள்ளதாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.